விலை ரூபா 1-00

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 20-2-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 21

"ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல்மொழியைக்
கற்கையிலும்
எந்தநாளும்
திங்களியைச் செந்தமிழைத்
தென்றலின்
பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்"
— பாரதிதாசன்

# இந்திய தீர்மானத்திற்கு இலங்கை கடும் எதிர்ப்பு!

## சிங்கப்பூர் பிரதமர் - ஜனதிபதி ஜே. ஆர். பேச்சின் விளைவு?

அண்மையில் புதுடில்லியில் நடைபெற்றுமுடிந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில், இந்து சமுத்திரம் தொடர்பாக இந்தியா கொண்டுவந்த தீர்மானத்திற்கு இலங்கை கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவின் தீர்மானம் ஒருபக்க சார்பானதாகவும், அமெரிக்க எதிர்ப்பைக் கொண்டதாகவும் அமைந்துள்ளதெனக் கருத்துத் தெரிவித்த சிறிலங்காவோடு சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளும் கைகோத்துக்கொண்டன.

அமெரிக்காவின் செல்வாக்கிற்குட்பட்ட ஏசியன் நிறுவனத்தில் ஓர் உறுப்புரிமை நாடாக விளங்கும் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் கடந்த மாதத்தின் இறுதியில் இலங்கைக்கு வந்தபோது ஜனதிபதி ஜே. ஆருடன் அவர் நடத்திய 'குசுகுசு'ப் பேச்சின் விளைவாகவே இந்தியாவோடு இலங்கை மோதிக்கொண்டது என்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி ஏசியன் நிறுவனம் இந்தியாவுக்கு மாறன கொள்கையைக் கொண்டதென்பதும், இந்தியா கம்பூச்சியாவை ஆதரித்ததினுல் அதன்மேல் அந்நிறுவனநாடுகள் ஆத்திரம்கொண்டிருக்கின்றனஎன்பதும் பகிரங்கரகசியம்.

வல்லரசுகளின் தொடர்பே வேண்டாம் என்ற எண்ணத்தோடு 1961ம் ஆண்டில் யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேட்டில் ஆரம்பமான அணிசேரா நாடுகளின் இயக்கத்தில் அப்போதுஇருபத்தைந்து நாடுகளே சேர்ந்திருந்தன. இந்த எண்ணிக்கை தற்போது 96 ஆக அதிகரித்துள்ள இச் சூழ்நிலையில் அதனுள் கோஷ்டிப் பூசல் உருவாகியிருப்பது தெளிவாகவே தெரிகின்றது. அணி சேரா நாடுகளின் இயக்கத்தில் அமெரிக்க சார்பு நாடுகளுக்கு சிங்கப்பூர், மலேஷியா போன்ற நாடுகள் தலைமைவகிக்கின்றன. றஷியா ஆதரவு நாடுகளில் கியூபா, வியட்னும் முன்னணியில் திகழ்கின்றன.

சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் திரு. தனபாலன் மேற்படி இயக்க மாநாட்டில் பேசும் போது றஷிய சாபு நாடான கியூபா அணிசேரா நாடுகளின் இயக்கத்திற்குத் தலைமை தாங்க என்ன தகுதி இருக்கின்றது எனக்கேட்டதும் அதனுல் ஆத்திரமடைந்த கியூபா நாட்டின் பிரதிநிதிகள் மாநாட்டை விட்டு வெளியேறியதும் இயக்கத்தில் உள்ள கோஷ்டிப்பூசலை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்கா உட்பட, மேற்கு நாடுகளின் பொருளாதார



உதவிகளில் அதிகமாகத தங்கியிருக்கும் இலங்கையின் முதலாளித்துவ யு. என். பி அரசு, இந்த இரண்டு கோஷ்டிகளில் எப்பக்கம் சாய்ந்திருக்கின்றது என்பதை இலகுவாகவேபுரிந்து கொள்ளலாம். சிங்கப்பூர்நாட்டைப் பின்பற்றி சிறீலங்காவை முன்னேற்ற வேண்டுமென்ற ஜே. ஆரின் முழக்கமும்- சிங்கப்பூர்பிரதமர் லீ. குவானுக்கு வெலிகமையில் அவர் கொடுத்த பிரமாண்டமான வரவேற்பும், பணக்காரவர்க்க யு. என். பி அரசின் மேற்கு நாடுகள் ஆதரவுப் போக்கை மேலும் உறுதி செய்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை அது ஒரு றஷிய சார்பு

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் கைது!

கொங் கொங் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் பாங்டான் சீனவில்கைதுசெய்யப்பட்டுள்ளார். ஓவியரான இவ[illegible] கொங் கொங்கில் பிரசி[illegible] பெற்ற சஞ்சிகைகளுக்கு [illegible] சியல், இலக்கியம், கலை சம்ப[illegible] தமான விஷயங்களைப் பற்றி எழுதிவருபவர்.

சீனவில் நடைபெற்றுக் கொண்டிருந்த கலைப் பொருட் காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக திரு. பாங்டான் [illegible] கொண்டிருக்கும் [illegible] அரசாங்கம் இவ[illegible]கைது செய்தது.

*

## தேர்தல் இல்லாத தேசம்

பாகிஸ்தானில் பொதுத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென ஏழு எதிர்க் கட்சிகளும் கூட்டாக விடுத்த வேண்டுகோளை, ஜனதிபதி ஷியர் நிராகரித்து விட்டார்.

## கல்குடாத் தொகுதியில் பாடசாலைகளுக்கு மூடுவிழா!

போதியளவு ஆசிரியர்கள் இல்லாததினுல் கல்குடாத் தொகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் தற்போது சீரான கல்வியை புகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் பழி வாங்கல் காரணமாக மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றத்தினுல் சில பாடசாலைகளுக்கு மூடு விழாவும் நடத்தப்பட்டுள்ளது.

## பாலஸ்தீனர்கள் அரசு அமைக்க சதாத் ஆதரவு

பாலஸ்தீனர்கள் தமக்கென்று ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று ஜனதிபதி அன்வர் சதாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பாலஸ்தீனப் பிரிவுகள் உட்பட பாலஸ்தீன விடுதலை இயக்கம்கூடி பொறுப்பான அரசாங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரவேலுடனுன பகைமையை ஒழிக்க இதுவே நல்ல முயற்சி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உண்மையைச் 'சுதந்திரன்' ஒப்புக்கொள்கிறது!

'உதயசூரியன்' வாரஏட்டில் தலைவர் அமிர் எழுதும் கட்டுரைகளை 'அறிக்கை' என்றும்- அதில் அடங்கியுள்ள சில வாசகங்களின் பொருள் புரியாது (உ;ம் 'தமிழக முதல்வரை விழிக்கத்தானுமில்லை' என்ற வசனம், எம். ஜி. ஆரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது போல) திரித்தும் மாற்றியும் எழுதி அவற்றை முன்பக்கச் செய்தியாகப் போட்டு சுதந்திரனின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அவ்வேட்டின் ஆசிரியர்- 'உதயசூரியன்' வார இதழை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற அணியின் பத்திரிகை என்று சொல்லப்படுவதாக தமது ஏட்டில் (11-2-81) எழுதி எரிச்சலைக் கொட்டியுள்ளார்.

எரிச்சலை வெளிப்படுத்துவதற்கென்றே அவ்வாறு எழுதப்பட்ட போதும், சுதந்திரன் ஆசிரியர் ஓர் உண்மையை ஒப்புக்கொண்டதற்காக நாம் அவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

'உதயசூரியன் த. வி. கூட்டணியின் பாராளுமன்ற அணியின் பத்திரிகை என்று சொல்வதன் மூலம்- அந்தப் பதினறு பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல லட்சக்கணக்கான தமிழ்ப்பேசும் மக்களின் ஒரே ஒரு பத்திரிகை 'உதயசூரிய'னே என்று சுதந்திரன் ஆசிரியரின் வாயிலாகக் கேட்பது உள்ளபடியே நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

'சுதந்திரன்' போல் 'உதயசூரியன்' ஒரு தனிப்பட்ட பத்திரிகையாசிரியரின் சொத்தல்ல என்பதும் இதன் மூலம் நிரூபணமாகின்றது இல்லையா?

## 'மாணிக்கம்' மறைந்தது!

தமிழின விடுதலைப் போராளிகளில் ஒருவரும் தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் திருக்கோணமலை முன்னுள் எம். பி. யுமான திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்களை (13.2.81ல்) காலன் கவர்ந்து விட்ட தெண்ணிக் கண்கலங்கி நிற்கின்ருேம்.

ஒரு மாதத்துக்கு முன்பே திரு. பா. நேமிநாதனை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் நாம்- ஈழத்தமிழினத்தின் மத்தியில் ஒளி வீசிக் கொண்டிருந்த இன்னெரு மாணிக்கத்தையும் இழந்து விடும் துர்ப்பாக்கிய நிலைக்காளாகியிருக்கின்ருேம்.

அமரர் காட்டிய வழியில் நடைபோடுவதே நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# தானை அமைப்போம் புறப்படு தமிழா!

நெடுந்தீவு எனில் நமது நெஞ்சமெலாம்
நிறைபவரே தனி நாயக அடிகள் தான்!
சுடுந்தீவு தமிழரெனும் உணர்வாலே!
சுயமரியாதையினை காக்கும் மண்
கொடுந்தீவு தமிழ்த் தாயின் பகைவர்களை
கொட்டுமிரை கடலுக்குள் குப்பைகளே!
விடுந்தீவு படகுகளை அலைமீது
வேந்தனவன் ராஜராஜன்படை போலே!

ஊர்காவல் செய்யு மொருதுறை
'ஊர்காவற்றுறை' யென்றே உலகம்
ஓர் குரலில் சொல்லுமிது உண்மை
ஒரு பகையும் உள் நுழைய மாட்டா!
சீர் பொலியும் தமிழணங்கின் கையில்
செங்கோலே! செய்யுந்தமிழரசால்
பாரெல்லாம் தலைவணங்கி நிற்கும்
பைந்தமிழர் கோட்டம் நான் பாடேனே?

கண்ணுகை விளங்கு மொரு தலைவன்
கால மெலாம் தமிழ் நலடம பேணும்
மண்ணுகும்! மானம், தமிழ் வீரம்
மலர்த் தோட்டம் போல மணம் வீசும்
பண்ணுகம் பெற் றெடுத்த மைந்தன்
படை நடத்தும் தளபதியாம் அமிர்
விண்ணுக விரிந்ததவன் பெருமை
வியப்புண்டோ? விரோதிகளும் ஏற்பார்!

கொட்டு முர சென்று கொட்டினுர்
கூடி நின்ற தமிழ் மக்களே!
வட்டுக் கோட்டை எனும் பூமியில்
வரலாறு புதி தொன்றெழுதினுர்
எட்டுத் திக்கும் இது கேட்டது
எங்கள் தமிழ் ஈழம் பிறந்தது
தொட்டு நாம் கும்பிட வேண்டுமே
சுதந்திர மண்ணது போற்றுவோம்!

இனிய யாழ் இசை போலும் பேச்சு
எந்தமிழின் எதிரிகளைக் கண்டால்
குனியும் விற்பாணம் போல் குத்தும்
குறிப்[illegible] 'யாழ்ப்பாணம்' என்றுர்!
பணி என்[illegible]கே செய்வோர்
பாண்[illegible]பு வழி வந்தோர்
தனி ஒரு நாடு[illegible]த் தமிழன்
தானுள வழி காணும் மக்கள்!

சங்கிலி மன்னனேர் சரித்திரம்
சதி செய்த 'காக்கை' ஓர் தரித்திரம்!
இங்கவன் பெருமையை இயம்பிடும்
எழில் நகர் நல்லூருக்கிணையில்லை!

செங்கையில் வேலுடன் தோன்றுவான்
சேவற் கொடி யோனும் முருகனே!
பொங்குமவன் அருள் மழையிலே
பூரித்துப் போகும் இப்பூமியே!

தெல்லிப்பளை எனும் சொல்லிலே
தேன் உண்டு, பாய்ந்திடும் காதிலே!
மல்லிகைப் பூப் போல உள்ளமே
மாசு மறுவில்லா வார்த்தைகள்
மெல்ல மெல்லத் தமிழ்ச் சாதிக்கே
மேன்மைகள் சேர்த்திட வாழ்ந்தவன்
செல்வா எனும் தமிழ்ச் செம்மலை
தந்த நிலமது வாழ்த்து வோம்!

அரும்பவன் ஆயினும் அஞ்சிடான்
ஆதிக்க புரிக் கோர் புலியவன்
துரும்புதான் உயிரெனத் துணிந்தவன்
தூய தமிழ்ப்பணி தொடர்ந்தவன்
இரும் பென நெஞ்சினன்; ஏறுபோல்
எடுத்தடி வைத்தவன் சிவகுமார்
உரும்பிராய் மண்ணவன் பேரினுல்
உயர்ந்தது வா னென உண்மையே!

வலிய ஒருபகைவந்த போதும்
வல்வெட்டித்துறை ஊரைச் சேர்ந்தோர்
எலி என்றே எண்ணியதை அடிப்பார்
இழந்த தமிழ் ஈழத்தை மீட்க
பலி பீடம் ஏறும் அவர் கூட்டம்
பயந்தாலும் சிங்களவர் கண்ணில்
புலி என்றே பெயர் பூணலானுர்
பூமியது வியட்னுமைப் போலே!

விளை நெல்வயல்கள்; தேனூறும்
விரிந்த மலர்ச்சோலை; தடாகங்கள்
குழை வாடா மரங்கள்; சிறு குருவி
கூட்டமதன் கொஞ்சல்; குயிலோசை!
பழைய தமிழ் நிலமாம் மருதம்
பார்வையிலே எல்லாமே பசுமை!
கிளை சேர்த்து வாழும் தமிழ்ச் சாதி
கிளி நொச்சி ஊர் தமிழ்க் கேணி!

(அடுத்த இதழில் முடியும்)

**கவிஞர் வாகரைவாணன்**

## சுடச் சுடச் செய்திகள்;

'இலங்கையின் பல பாகங்களிலும்- சிறப்பாக தமிழீழத்திலிருந்து சுடச்சுடச் செய்திகளை அனுப்பி வைக்கும்படி 'உதயசூரியன்' நிருபர்களைக் கேட்டுக் கொள்கின்ரேம். செய்திகள் சுருக்கமாகவும்- தெளிவாகவும் இருக்க வேண்டும்.

## யு. என். பி அரசுக்கெதிராக மாணவர்கள் கிளர்ச்சி!

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் தவிர்ந்த, இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக் கழக மாணவர்கள் ஏறக் குறைய இரண்டாயிரம் பேர் இன்றைய யு. என். பீ அரசுக்கெதிராக கடந்தவியாழனன்று (12-2-81) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனை ஒட்டி கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டாயிரம் மாணவர்களும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் வகுப்புக்களுக்குப் போகாமல் பகிஸ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மானியக் கட்டணத்தில் பகல் உணவு வழங்க வேண்டும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்த வேண்டும், பரீட்சை முடிவுகளைத் துரித கெதியில் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்தே யு. என். பீ அரசுக்கெதிரான கிளர்ச்சி நடவடிக்கையாக பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படுவதை எதிர்ப்பதும் மாணவர்கள் கோரிக்கைகளில் ஒன்ருகும்.

## 'சுதந்திரன்' ஏட்டின் ஆத்ம பரிசோதனை!

''கூட்டணி ஏடு புட்டுவைக்கும் உண்மை'' என்ற தலைப்பிட்டு 11-02-1981 அன்று 'சுதந்திரன்' வெளியிட்டுள்ள செய்தி எமது கருத்தை மிகவும் கவர்ந்தது.

11-01-81, 25-01-81 ஆகிய திகதிகளில் சுதந்திரன் தானே வெளியிட்டுள்ள செய்திகளை மேற்கோள் காட்டி அவை எவ்வளவு தப்பும் தவறுமானவை என்பதை விளக்குவதற்குக் கூட்டணி ஏடு வெளியிட்டுள்ள உண்மைச் செய்தியையும் மறு பிரசுரம் செய்துள்ளது.

சுதந்திரன் தன்னைத்தானே ஆத்ம பரிசோதனை செய்து கொண்ட இச்செயல் பாராட்டப்படவேண்டியதொன்றே.

அண்மைக்காலங்களில் சுதந்திரன் தரும் செய்திகளில் பல திரிப்பும் சோடிப்பும் பெற்றவையே. சுதந்திரன் உண்மைகளைத் திரித்துத் தனது கருத்துக்கு ஆதரவாகச் சோடித்து வெளியிடும் போக்குடையது என்பதற்கு 11-1-91, 25-1-81 ஆகிய திகதிகளில் சுதந்திரன் வெளியிட்டதாகக் கூறும் செய்திகளே போதிய எடுத்துக் காட்டுகளாகும். இவற்ருல் என்போன்ற பலர் பேதலிப்புறுவதும் உண்மைகளைத்தேடி அலைவதும் சுதந்திரன் தரும் வேதனைகளே.

எமது ஈழத்தந்தையால் உருவாக்கப்பெற்று எம்மால் போற்றி வளர்க்கப்பெற்ற சுதந்திரன், எம்மை வருத்திக் கொண்டே அழிவது கண்டு வேதனையுறும் எமக்குச் சுதந்திரனின் தற்போதைய மனமாற்றம் ஆறுதலளிப்பதாக உள்ளது.




இதனைத் தொடர்ந்து இனி மேலும் தலைவர்களின் செய்திகளைத் திரித்தும் சோடித்தும் எழுதி மக்களைப் பேதலிப்புறுத்தாமல் உண்மைகளையே எழுதும் என்று நம்புவோமாக.

க. சிவசாமி,
யாழ்ப்பாணம்,
12-02-81.

### "உதயசூரியன்" சந்தா விபரம்

| | |
|---|---|
| **இலங்கை** | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30.00 |
| **இந்தியா** | |
| ஒரு ஆண்டு | 75-00 |

## 'அபிவிருத்தி திட்டங்களுக்கு 'அரோஹரா'

தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்திக்காக யு. என். பி அரசு பாரிய திட்டங்களை வகுத்துள்ளதுஎன்று, தமிழகம் சென்றிருந்த அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை அங்குள்ள பத்திரிகைக்குப் பேட்டி அளித்தார். ஆனுல், அவர் அப்படிப் பேட்டி அளித்து ஒருமாதம் கூட 'ஆகவில்லை- அதற்குள், திருகோணமலை, மட்டக்களப்பு மன்னுர். முல்லைத்தீவு போன்ற தமிழர் பிரதேச நகரங்களில் மேற்கொள்ளப்பட விருந்த அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது. இதற்கான காரணம் நிதிப்பற்ருக்குறையே என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஊரைவிட்டு வெளியேற முஸ்லிம்களுக்கு உத்தரவு!

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திராஓடை, நெய்னுக்காடு போன்ற இடங்களில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழும் முஸ்லிம் மக்களை அவ்விடங்களை விட்டு வெளியேறும்படி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் உத்தரவிடப்பட்டிருக்கின்றது.


மேற்படி பகுதியில் விவசாயத்தை மேற்கொண்டுவரும் முஸ்லிம்களுக்கு விவசாயம் செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கவும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மின்வெட்டு அமுல் செய்யப்படும்!

இம்மாதம் 20-2-81 வெள்ளி துவக்கம் ஐந்து மணி நேர மின் வெட்டு அமுல்செய்யப் படுமென்று மின்சார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை- அனுவசியமான மின் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு அரசாங்கம் சகல நிறுவனங்களுக்கும், திணைக்களம், கைத்தொழில் கூட்டுத்தானங்கள் என்பனவற்றுக்கும் பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலட்சிய இதயங்களோடு..

மட்டக்களப்புத் தென்பகுதி மனதைக் கவரும், இயற்கை அழகு கொழிக்கும் பூமி. துள்ளி விளையாடும் மான் கூட்டங்களும், பிளிற்ருெலி எழுப்பும் யானைக்கூட்டங்களும், சீறும் சிறுத்தைப் புலிகளும் இன்னும் பலவகை வனவிலங்குகளும் தம்மிச்சையாகத் திரியும் குமணையின் தெற்கெல்லையில் கும்புக்கன் ஆறு ஓடுகிறது. ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய மூன்று ஆண்டுகளின் பின்- 1799இல்- குடியேற்ற நாட்டுக் காரியதரிசியாக இருந்த சேர். ஹியூகிளெக்கோன் என்பவர் இத்தீவின் அமைப்புப் பற்றிச் சீமைக்கு ஓர் அறிக்கை அனுப்பினுர். ''சரித்திரத்திற்கு முற்பட்ட காலம் முதல் இரு தேசிய இனங்கள் இத்தீவின் உடைமையைப் பகிர்ந்து வந்தன என்றும், மேற்கே சிலாபம் ஆறு தொடக்கம் வடமேற்குக் கரையோரத்தையும் வடக்கேயுள்ள தீவுகள் உட்பட வடபகுதியையும் கிழக்குக் கரையோரமாகத் தெற்கே குமணை அல்லது கும்புக்கன் ஆறு வரையுள்ள பகுதியையும் உள்ளடக்கிய நிலப்பரப்பில் தமிழ் மக்களும் திருத்தப்படாத நிலையையும் பார்த்தோம். சிங்களக் குடியேற்றப் பகுதிகளில் தார்ருேட்டுகளையும் தமிழ்க் குடியேற்றப் பகுதிகளில் குண்டும் குழியுமாகச் சேறும் சுரியுமாகக் கிடக்கும் வீதிகளையும் கண்டோம். இலங்கையில் நடைபெறும் தமிழ் இனத்திற்கு எதிரான புறக்கணிப்பு நடவடிக்கைகளின் மொத்த உருவமாக அம்பாறைமாவட்டம்காட்சியளிக்கிறது. தமிழ்மொழிக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டுவிட்டன என்று ''கிழக்கின் தந்தை'' என்று தம்மை அழைக்கும் அமைச்சர் தேவநாயகம் யாழ்ப்பாணத்தில் முழங்கும் அதே நேரத்தில் எழுபது வீதம் தமிழ்பேசும் மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில்- திரு. தேவநாயகம் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட கச்சேரி, உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியவற்றில் தனிச் சிங்களம் அரசோச்சுவதை நாம் நேரடியாகக் கண்டோம்.

தன் அமைச்சிலே தானும் தமிழில் கருமமாற்றச் செய்யமுடியாத திரு. தேவநாயகம் இலங்கை முழுதும் தமிழுக்கு இடம் கிடைத்துவிட்டதாகக் கூறுவது யாரை ஏமாற்றுவதற்கு? கூரையில் ஏறிக் கோணல் சுரைக்காய் பிடுங்க மாட்டாதவர் வானத்தைப் பிளந்து வைகுந்தம் காட்டிய கதைதான். அரசியல் அமைப்பில் தமிழுக்கு உரிமை வழங்கியிருப்பதாக ஆளுங்கட்சி அமைச்சர்கள் கூறுவதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்பதைத் தமிழ் மக்கள் நன்கு

என்று கூடிய கும்பலிடம் அவர் கூறியிருக்கிருர். இதுபற்றி யாழ்ப்பாணப்பிரதிநிதி திரு. யோகேஸ்வரன் ஒரு உண்மையைக் கிராமயாத்திரையின் போது வெளியிட்டார். அவர்களில் பலர் விதைக்காமலே ஏற்கனவே அறுவடை செய்து கொண்டிருப்பவர்கள் என்றஉண்மையை அவர் கூறினுர். ஆசிரியர் நியமனம், வங்கி நியமனம் முதலியவற்றில் ஐயாயிரம் முதல் பத்தாயிரம் வரை அறுவடைசெய்து வாழும் கும்பலுக்குப் பிரதமர் அறுவடை செய்யுமாறு அனுமதி வழங்கிப் போயிருக்கிருர். அவர்கள் சொல்லாமலே செய்யும் ''பெரியர்'' என்பது பிரதமருக்குத் தெரியாது போலும்.

இன்னும் ஒன்றை அவர் உணராவிட்டாலும் இலட்சிய இதயங்கள் நன்குஉணர்ந்திருக்கின்றன. சென்ற ஆட்சிக் காலத்தில் இதேபோன்ற ஒரு கும்பல்- இவர்களிற் பெரும்பாலோர் அந்தக் கும்பலிலும் இருந்தவர்களே- ஆனுல் ஒரு வித்தியாசம் இன்று பச்சைச்சட்டை அணிந்திருக்கிருர்கள். அன்று நீலச்சட்டை அணிந்திருந்தார்கள்- அமைச்சர்கள் வரும்போது ஆலவட்டம் பிடித்து, அவர்கள் சென்றபின் அறுவடை செய்து வாழ்ந்து வந்தார்கள். அன்றைய அமைச்சர் குமாரசூரியர் பவனிவந்த நேரத்திலெல்லாம் கூட வட்டமிட்டுத் திரிந்தவர்கள்- ''ஆலிலே பூவுங்காயும், அளிதரு பழமுமுண்டேல், சாலவே பட்சியெல்லாம் தங்குடியென்றே வாழும்'' என்பது போலச் சுற்றியவர்கள்- தேர்தல் வந்தபோது எங்கே போனுர்கள் என்பதை மக்கள் அறிவார்கள். பிரதமர் நன்ருக உழுதிருக்கலாம், ஆனுல்அவர்கள்

# ● சிங்கள வகுப்புவாத விதை
# ● செந்தமிழ்மண்ணில்முளையாது!



தென்மேற்குப் பகுதியிலும் உள்நாட்டிலும் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகிருர்கள்'' என்று அவர் குறிப்பிட்டார். ஆங்கில ஆட்சியின் ஆரம்ப காலத்தில் தமிழர் தாயகத்தின் தென்கிழக்கெல்லை கும்புக்கன் ஆறு என்பது உறுதியாகின்றது.

இந்தப்பகுதியில் சிறு குன்றுகள் நிறைந்த பகுதியில், கடலும், மலையும், காடும் சூழ்ந்த அமைதியான சூழலில் உகந்தை முருகனுலயம் அமைந்திருக்கிறது. எமது இயக்கத்தின் தீர்மானப்படி இந்த ஆலயத்திலிருந்து எம் கிராமயாத்திரை இம்மாதம் 2ந் திகதி ஆரம்பமானது. பொத்துவிலில் கிறீஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்களிலும் வழிபாடு நடைபெற்ற பின் முதற் கருத்தரங்கு திரு. மகேந்திரனின் இல்ல முன்றலில் நடைபெற்றது. ஒன்பது பாராளுமன்ற உறுப்பினரும், இளைஞர் இயக்க, மகளிர் இயக்கச் செயலாளர்களும், பல்வேறு தொகுதிக்கிளை முக்கியஸ்தர்களும், இளைஞர் பேரவை மகளிர் பேரவைத் தொண்டர்களும் இக்கிராம யாத்திரையில் பங்குகொண்டனர். முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓர் பகுதியாக இருந்து இன்று அம்பாறை மாவட்டம் என்று அழைக்கப்படும் இப் பகுதியின் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்ருேம். பல்லாயிரம் மக்களைச் சந்தித்தோம். அவர்கள் அளித்த இனிய உணவை உண்டோம், அவர்கள் மத்தியில் தங்கினேம். அவர்கள் குறைகளைக் கேட்டோம். அவற்றைத் தீர்க்க இயன்ற நடவடிக்கைகளை எடுத்தோம். அவர்கள் சந்தேகங்களை அறிந்தோம். அரசியற் தெளிவு கொடுத்தோம். இயக்க அமைப்புகளை இல்லாத கிராமங்களில் அமைத்தோம். இப்படியே 8ந் திகதி இரவு வரை இம்மாவட்டத்தின் வடக்கெல்லையிலுள்ள பெரிய நீலாவணை வரை சென்ருேம். பாண்டிருப்பிலுள்ள புகழ் பெற்ற திரெளபதி அம்மன் ஆலய வீதியில் ஓர் பெரிய கருத்தரங்கோடு எமது கிராம யாத்திரையைப் பூர்த்தி செய்தோம்.

ஆட்சிமன்ற உறுப்பினர் அத்தனைபேரும் ஆளுங்கட்சி உறுப்பினராக இருக்கும் இம்மாவட்டத்தில் மக்கள் படும் துன்பமும் புறக்கணிப்பும் சொல்ல முடியாதவை. சூருவளியில் பறந்த ஓடுகள் இன்னும் திரும்பப் போடப்படாமல் மழையில் நனைந்து படிக்கும் குழந்தைகளையும், உடைந்த ஆலயங்கள் திருத்தப்படாது வெய்யிலில் காயும் விக்கிரங்களையும், சேதமடைந்த வீதிகள், பாலங்கள் பல தமிழ்ப் பகுதிகளில்

அறிவார்கள். ஏட்டில் 'தேன்' என்று எழுதிவிட்டு நாவினுல் நக்கிச் சுவைத்தால் இனிக்குமா?

இதே தன்மை வாய்ந்தது தான் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பேச்சும். நாடு முழுவதையும் ஒரே கண்ணேட்டத்தில் அபிவிருத்தி செய்வதாக மாண்புமிகு சனுதிபதியும், பிரதமரும் அடிவருடும் தமிழ் அமைச்சர்களும் தம்பட்டமடிக்கின்ருர்கள். அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் உயிர்நாடியான கிட்டங்கிப் பாலத்தின் அவநிலையைப் பார்த்தால்- மட்டக்களப்பு மாவட்டத்தில் முந்திய அரசாங்கத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட வலையிறவுப் பாலத்தை முடிக்கப் பணம் இல்லை என்ற கைவிரிப்பைக் கவனித்தால் யாழ்ப்பாணத்தில் மகாதேவா தாம்போதியைக் கட்டப் பணமில்லை என்று கூறி நாம் எமது தொகுதிகளுக்கு ஒதுக்கிய பணத்தில் அதற்குச் செலவிட வேண்டிய அவலநிலையை நினைத்தால்- ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திக்குச் சிங்களப் பிரதேசங்களில் எத்தனையோ மாவட்டங்களில் உலகவங்கியினதும் வெளிநாடுகளினதும்உதவியில் கோடிகோடியாகக்கொட்டிச்செலவழிக்கப் படும் பணத்தையும் தமிழ்ப் பிரதேசத்தில் இன்றும் ஒரு மாவட்டத்திற்காவது வெளி நாட்டுதவியோ ஆரம்பவேலையோ இல்லாத நிலையையும் ஒப்பிட்டால் - எல்லோருக்கும் நீதி வழங்குவதாக ஊருக்கு உலகுக்குக் கூறிக்கொண்டு வடிகட்டினவகுப்பு வாதப் போக்கையே வழக்கம்போல ஐக்கிய தேசியக்கட்சி கடைப்பிடிக்கிறது என்பதை இலட்சியஇதயங்கள் புரிந்துகொள்வார்கள்.

சென்ற வாரம் பிரதமருடன் எட்டு அமைச்சர்களும் பதினைந்து உதவி அமைச்சர்கள், மாவட்டஅமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுத்து வந்தனர். கச்சேரியில் நடந்த மகாநாட்டில் இந்தப் படையெடுப்பின் ஒரு நோக்கம் அரசியல் பிரசாரமாய் இருக்கலாம் என்றும் அந்தப் பிரசாரத்தைக் களத்தில் சந்திக்க நாம் ஆயத்தமாயிருப்பதாகவும் கூறினேன். அபிவிருத்தி பற்றிய ஆரவாரத்தின் உண்மை நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு திரட்டுவது தான் என்பதை பிரதமரின் பேச்சுகள் சிலஉறுதிப்படுத்தி விட்டன. ''நான் நிலத்தை உழுது நன்ருகப் பண்படுத்தி விட்டேன், நீங்கள் விதைத்து அறுவடை செய்யுங்கள்'' என்று தமது கட்சி ஆதரவாளர்கள்

விதைக்கும் விதைகள் உழுத்துப்போன- வண்டுதிப்போன- யூ. என். பி. விதைகள் தான். சிங்கள வகுப்புவாதம் என்ற பாரிய கிடாரத்தில் தனிச் சிங்களமொழிக் கொள்கை என்ற நீரில்- குடியுரிமைச் சட்டம், குடியேற்றத்திட்டம் என்ற கொடிய நெருப்பில்- தமிழ் மக்களின் வேதனை மூச்சில் வெந்த விதைதான் யூ. என். பீ. விதை என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். பிரதமரின் உழவு அறுவடை செய்யும் ஆதரவாளர்களுக்குப் பயன்படுமே தவிர அவருடைய கட்சிக்கு எவ்வித பலனையும் தரமாட்டாது. தமிழ் ஈழம் என்ற வயலில் ஏற்கனவே விடுதலை உணர்ச்சி என்ற பயிர் முளை கொண்டு விட்டது. அதை இந்த யானைகள் உண்ணுது காத்து உரிய நேரத்தில் சுதந்திரம் என்ற நெல்மணியை அறுவடை செய்ய இலட்சிய இதயங்கள் தயாராக இருக்கின்றன என்பதைப் பிரதமருக்கும்அவருடன் வந்த சகாக்களுக்கும் கூறிவைக்க விரும்புகிறேன்.

## அண்ணன் அமிர்

## பொத்துவில் 'ரங்கா'வுக்குப் பொலிஸ் பாதுகாப்பில்லை!

பொத்துவில் தொகுதி இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் சென்றபோது தமிழகப் பத்திரிகைகளுக்கெல்லாம் பேட்டிதந்து சுயவிளம்பரத்தைத் தேடிக்கொண்டது வாசகர்கள் அறிந்ததே!

,கல்கி' பத்திரிகைக்கு (25 - 1 - 81) அவர் அளித்த பேட்டியில், தமது அண்ணன் கனகரத்தினத்திற்குப்போல் தனக்குப் பொலிஸ் பாதுகாப்புத் தரப்பட வில்லையெனத் தெரிவித்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பேசுகிறார்

இம்மாதம் இரண்டாம் நாளில் தென்தமிழ் ஈழத்தின் ஒரு பகுதியாம் பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட கிராமயாத்திரை தமிழர்விடுதலைக் கூட்டணிக்குப் பெரும் வெற்றியைத் தந்துள்ளது.

'வழியெல்லாம் மக்கள் கூடி தலைவர்களுக்கு ஊக்கமளித்தனர்' என்று தினபதியே (4.2.81) எழுதுமளவுக்கு தமிழ்ப் பேசும் மக்களிடையே அப்படியொரு எழுச்சி அலை எழுந்து வீசியிருக்கிறது.

இயக்கப்பணிகளை முன்னெடுத்துச் செல்லவும்- இலட்சிய தீபத்தை மக்கள் இதயங்களிலே ஏற்றி விடவும் துவங்கப்பட்ட இப்புனிதமான யாத்திரையின் போது பொதுமக்களோடு கலந்து உறவாடவும்- சிங்கள இனவாத யூ. என். பி அரசின் கீழ் அவர்கள் அனுபவிக்கும் அல்லல்களை அறியவும் நமது தலைவர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

குடியேற்றம் என்ற போர்வையில் தமிழர் பிரதேசங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் சிறீலங்கா ஏகாதிபத்திய வாதிகளின் சிங்கக் கொடி பறந்து கொண்டிருக்கும் அந்தச் செந்தமிழ் மண்ணில்- தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் தாய் மொழியிலே எந்தக் கருமமும் ஆற்றமுடியாத நிலைமையைக் கண்ட நம் தலைவர்களின் நெஞ்சங்கள் உருகி வழிந்திருக்கின்றன.

**'தமிழ் மொழியின் உரிமைகளைத் தந்து விட்டோம்' என்று தெருவுக்குத் தெரு தேவநாயகம் கூச்சல் போட்டுக் குழறியடித்தாலும்- பொத்துவில் நாயகி 'பூபாளம்' இசைத்தாலும்- இராசதுரை எழில் தமிழால் மயக்கினாலும்- நடைமுறையில் மக்கள் அங்கு நரக வேதனையே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

அரசாங்கத்தில் நாங்கள் இணைந்திருப்பதே- எங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தான் என்று அந்தமூவரும் முனகல் ஒலி எழுப்பிய போதும்- அங்கு நடைபெறுவது அபிவிருத்தியல்ல- தமிழ் விவசாயிகளின் உடைமைகளைக் கூட பௌத்த சிங்கள இனவாதம் தட்டிப்பறிக்கின்றது என்ற உண்மையே நிர்வாணமாகக் காட்சி அளிக்கிறது!

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த தொட்டாச்சுருங்கியில் - ஏழைத் தமிழ் விவசாயிகள்- அவர்கள் விதைத்த வேளாண்மையை அறுவடை செய்ய விடாது- ஒரு விவசாயி 2200 ரூபாவீதம் பாஞ்சாலைக்குத் தரவேண்டுமென்று- அதன் முற்பணமாக 3400 ரூபாவை அவர்களிடமிருந்து பௌத்தபிக்கு ஒருவர் பெற்றுக் கொண்டதாகத் தெரிகின்றது.

ஆலயத்தின் பெயரால் செய்யப்பட்ட இந்த அநியாயத்தை யார் யாரிடமோவெல்லாம் எடுத்துச் சொல்லி அழுது ஓய்ந்திருந்த நேரத்தில்தான் தமிழ்த்தலைவர்களை அந்த அப்பாவித் தமிழர்கள் சந்தித்திருக்கிறார்கள்.

தானாடாவிட்டாலும் தசையாடும் என்பார்களே- அப்படி- தமிழ்த் தொழிலாளரின் அவலம்

# 'பாஞ்சாலை' கேட்ட பணம்!

அறிந்ததும் தலைவர்கள் எல்லோரும் இணைந்து தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்- இதனால்-

விவசாயிகளின் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமே பாய்ந்திருக்கிறது!

தமிழ்த்தலைவர்களின் நடவடிக்கையினால் பயந்த பௌத்தகுரு- தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது எனத் தேறியவராய்- தாம் விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட பணத்தில் ஒரு பகுதியை உரியவர்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டாரென்று அறிகின்றோம். இது உண்மையானால்-

**மனம்திருந்திய அந்த மதகுருவுக்கு நாம் சொல்லிக்கொள்வோம்- புத்தபகவானின் போதனையை அவர் இனிமேலாவது போற்றிப் பேண வேண்டும்!**

கிராமயாத்திரையால் கிடைத்த மிகப் பெரிய பலன்களில் இதுவும் ஒன்று!

அனாதையாய்- ஆதரவற்றவர்களாய் அல்லலை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருக்கும் அப்பகுதி மக்களுக்கு தமிழர் தலைவர் அமிர் அவர்கள் ஒரு நல்ல வாக்குறுதியையும் தந்திருக்கின்றார்.

'ஒவ்வொரு மாதமும் உங்களை வந்து சந்தித்து உங்கள் பிரச்சனைகளை அறிய தமிழர்விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இங்கே வருவார்' என்ற அந்த வாக்குறுதி- இனிமேலாவது அவர்கள் வாழ்க்கையில் ஒரு விடிவை ஏற்படுத்துமென்று நிச்சயமாக நம்பலாம்.

பொத்துவிலில் ஆரம்பமான கிராமயாத்திரை கல்முனைத் தொகுதியில்- புகழ் பூத்த திரௌபதி அம்மன் கொலுவீற்றிருக்கும் பாண்டிருப்பில் பூர்த்தி அடைந்திருக்கிறது.

இதைத் தொடர்ந்து- இம்மாதம் 20ம் திகதி யாழ்மாவட்டத்திலுள்ள ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஆரம்பமாகின்றது.

**இன உணர்ச்சியும்- மொழிஉணர்ச்சியும் அருவியென ஊற்றெடுக்கும் இடம் ஊர்காவற்றுறை- இது உலகறிந்த உண்மை!**

தரணியெல்லாம் தமிழின் சிறப்பை பரப்பிக் கொண்டிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டின் தாய்- தந்தையாக விளங்கும் தமிழ்த்திரு- தனிநாயகம் அடிகளார்- தமிழறிஞர் கா. பொ. இரத்தினம், பா. உ. அவர்களைத் தந்த நிலம் இது.

தமிழுக்காக வாழ்ந்த பெரியவர் வீ. ஏ. கந்தையா அவர்களையும் பெற்றெடுத்த பெருமை இந்த மண்ணுக்கே உரிமை!

இப்படி- சிறப்புக்கள் பலநிறைந்த செந்தமிழ் மண்ணில் தான் கிராமயாத்திரை ஆரம்பமாகின்றது.

ஆரம்பம் நன்றாகவே அமைந்து விடும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்காது- இதன் அடையாளமாக-

இன உணர்வு அலை இப்போதே அங்கு எழுந்து வீசிக்கொண்டிருக்கிறது.

வீசும் அலையின் வேகத்தைக் கண்டஞ்சிய இன விரோதிகள் எங்கெங்கோ ஓடி ஒழிந்துவிட்டார்களாம்!

ஆமாம்- இப்படை தோற்கின் எப்படை வெல்லப் போகின்றது?

# உதைப்பவன் காலினை முத்தமிடும் இழிசெயல் ஒழியுமா?

**நா. சிவராசசிங்கம்**

கடந்த 1-2-1981ஞாயிற்றுக் கிழமை மாலை, நயினாதீவுக்கு வருகை தந்த சமயம், சிங்களப் பிரதமரும் அவருடைய பரிவாரங்களும் நடந்து கொண்ட விதம், இங்குள்ள ஆளும் கட்சி அடிவருடிகளுக்கும், சர்வகட்சிப் பிள்ளைகளுக்கும் பலத்த அவமானமாக அமைந்தது. பிரதமர் வருகைக்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே இங்குள்ள பாடசாலைகளும், கிராம சபையும், பச்சோதிகள் சிலரும் ஆரவாரமாக வரவேற்பு ஒழுங்குகள் செய்வதில் இறங்கிவிட்டனர். கிராமமுன்னேற்றச் சங்கத் தேர்தலின் போது, போட்டியிட வந்து கூட்டணியாளரிடம் மூக்குடைபட்ட ஒரு சர்வ கட்சிபிள்ளை (இவர் முன்பு தமிழரசுக்கட்சி பின்பு குமாரசூரியர் கட்சி, தற்போது யோகேந்திரா கட்சி) வீட்டுக் குசினிக்குள், நாலு பேர் சாட்சியாக உருவாக்கிய சுயநலமிகள் மன்றம் இவ்விடயமாக மும்முரமாகச் செயல்பட்டது. ஏராளமான பணம் ''நன்கொடை'' என்ற பெயரில் இந்நோக்கத்துக்காக பொதுமக்களிடமிருந்து ஆசைவார்த்தை கூறியும், பயமுறுத்தியும் சேகரிக்கப்பட்டது. (இதற்கு முன்பு, இதே கும்பல் ''அமைச்சர் காமினிதிசாநாயக்காவுக்கு வரவேற்பு,, என்ற சாட்டில் ரூபா மூவாயிரம் வரையில் சேகரித்திருந்தது. அமைச்சரோ நயினாதீவுக்கு வரவே இல்லை. இன்றுவரை இந்தப் பணம் மக்களுக்குத் திருப்பிக் கொடுபடவுமில்லை. அதன் முடிவு (சிவ) சிதம்பர ரகசியமாகி விட்டது.)

பிரதமருக்கும் பரிவாரங்களுக்குமாகவும், உள்ளூர் எடுபிடிகளுக்குமாகவும், சுமார் ஐந்நூறு பேருக்கு, கோழி இறைச்சி விருந்தும் பலகார வகைகளும் நயினாதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் காத்திருக்க, ஆங்காங்கே ஒரு சில பச்சோந்திகள் நிறைகுடம், குத்துவிளக்கு பச்சைச் சட்டையுடன் படாடோபமாக நின்றிருக்க, ஹெலிக்கோப்டரை வேடிக்கை பார்க்கக் கிராமச் சிறுவர்கள் குழுமி நிற்க, சிங்களப் பிரதமர் பிற்பகல் மூன்றரை மணியளவில் வந்து இறங்கினர். பள்ளிப்பிள்ளைகளுடைய பலமணி நேர சிரமத்தின் விளைவாக மணல் பரவப்பட்ட மைதானத்தை ஹெலிகோப்டர் நெருங்கியது, அதன் காற்றாடியின் சுழற்சி வேகத்தால் பரவப்பட்டிருந்த மணல் முழுவதும் தரையிலிருந்துகிளப்பப்பட்டு கூடிநின்றோர் தலைகளில் அபிஷேகம் செய்யப்பட்டது. ''ஹெலிகோப்டர்'' பொழிந்த மணல் மழை ஓயும்வரை காத்திருந்துவிட்டுப் பிரதமர் குழுவினர் இறங்கியவுடன், கண்ணுக்குள் விழுந்த மணலையும் சரிவர அகற்றாமல் ''மாத்தயா''வுக்ரு மாலை சூட்ட அவதியாக ஓடினராம் அடிமைப் புத்திக்காரர்கள். ஒரு சில மாலைகள் மட்டும் கழுத்தில் வாங்கிக் கொண்டு, ஏனையவற்றை கைகளில் சேர்க்கத் தொடங்கிவிட்டார் சிங்களத்தின் பிரதமர். 'மாத்தையா' கழுத்தை நீட்டாமல் கையில்வாங்கியதுசிலஅடிமைகளுக்கு அவர் கொடுத்த முதல்அடியாகும். யூ. என்.பி. அபேட்சகர் கட்டுக் காசுமிழந்து பரிதாபகரமாகத் தோல்வியடைந்த தீவுத் தொகுதியைச் சேர்ந்த ஒரு சிறிய கிராமத்திலே, எத்தனை பேர் மாலை சூட்ட வருகிறார்கள் என்றால் இவர்களெல்லாம் போலிவேடதாரிகள் என்பது பிரதமருக்குப் புரியாமலா போய்விடும்? அவர் மகாவித்தியாலயத்தை நோக்கி நடக்கத் தொடங்க, அடிமைகள் அவரையும் முந்திக்கொண்டு மகாவித்தியாலய மண்டபத்தை ஓடிச் சென்றடைந்தனராம். ஏன் இந்த அவசரம் தெரியுமா? விருந்து மேசையில் ஐயாவுக்கு அருகிலே இடம் பிடிப்பதற்குத்தான்! மகாவித்தியாலத்தை நெருங்கிய பிரதமர் வித்தியாலய வளவைக்கூட எட்டிப் பார்க்காமல் சற்றுத்தூரத்தில் நின்றிருந்த பஸ்வண்டியை நோக்கிச் சென்றார். அடிமைகள் ஓடிச்சென்று விருந்து ஒழுங்கு பற்றி எடுத்துக் கூறினர். பிரதமரோ பிடிவாமாக விருந்துச் சாப்பாட்டை மறுத்துவிட்டு பஸ்ஸில் ஏறி விட்டார். எங்கும் நிற்காமல் பஸ் புறப்பட்டது. வழியில் நிறை குடங்களை வைத்துவிட்டு மாலைகளோடு நின்றவர்களின் பரிதாப நிலையை எழுத்தில் வடிக்கமுடியாது. புத்தர் கோவில் முன்பு பஸ் நிறுத்தப்பட்டது. பிரதமர் வருகை பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தின்படி நாகபூசணி அம்மன் கோவிலை தரிசித்த பின்னரே, புத்தர் கோவிலைத் தரிசிப்பதாகத் திட்டமிருந்தது. இதை அவ்வேளையில் ஞாபகப்படுத்த எந்த அடி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ இலங்கை வானொலியின் ஈனச்செயல்! ★

# தலைவர் அமிர் பேச்சில் எம். ஜி. ஆர். தலையிடவில்லை

சிறீலங்காவின் சிங்கள அரசாங்கம் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டைத் தனது பிரசாரக் களமாக்குதற்குச் செய்த முயற்சிகளையும் சூழ்ச்சிகளையும் அதனுடைய வானொலியில் ஒலிபரப்பப் பட்ட செய்திகள் நன்கு காட்டுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில் உரைநிகழ்த்தும் பொழுது தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். இடையிலே குறுக்கிட்டு அவரை அரசியல் பேச வேண்டாமென்று தடுத்தார் என்று, பச்சைப்பொய்ச் செய்தியை இலங்கை வானொலி தொடர்ந்து ஒலிபரப்பியுளது.

எங்கள் நாட்டு ஒலிபரப்புச் சேவை வேற்று நாட்டில் வைத்துஎம்முன்பரிகாசத்திற்கு ஆளாக்கப்பட்டபோது எமக்கு ஏற்பட்ட வெட்கத்தை புட்டுக் காட்டவே இதனைஇங்கு எழுதுகிறேன். ஒலிபரப்புக் கூட்டுத் தாபனச் செய்திச்சேவைப் பகுதி இதனை உணர்ந்தால் போதும். அதுவே இங்கு எழுந்த எம். ஜி. ஆர் அவர்களுக்கு எதிரான அலைக்குப் பிராயச்

**ஒற்றர் கந்தையா**

சன்டேஒப்சேவர் பத்திரிகைச் செய்தியின்படி ஒற்றர் வேலையைக் கச்சிதமாக ஒருவர் செய்திருக்கிறார், அவருடைய பெயரை டாக்டர் ஏ. கந்தையா என்று ஒப்சேவர் குறிப்பிடுகிறது. இவர் அப்பத்திரிகைக்கு, தமிழ் ஈழப்பிரசாரம், தமிழர் விடுலைக் கூட்டணியினரின் செயற்பாடுகள், தமிழ்நாட்டிலுள்ள

டாம் வரிசையிலே இடம் கொடுக்கப்பட்டதென்றும், அவராலே துரோகி என்று வருணிக்கப்பட்ட அமைச்சர் இராசதுரைக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் (சபாநாயகர்) பக்கீர்மரக்காருக்கும் முதல் வரிசையிலே இடம் கொடுக்கப்பட்டதென்றும், எந்த ஒரு பத்திரிகையும் வெளியிடாத சின்னத்தனமான இச் செய்தியையும் தந்துளது.

கொடுக்கப்பட்டது. இந்நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனியாக அச்சடிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலப் பிரதியின் விலை ரூபா 4. லண்டனில் உள்ள ஈழத் தமிழர் சங்கத்திஞல் அச்சிடப்பட்ட இந் நூலின் முற்பக்கம் ஈழத்தின் பரப்பெல்லையைக் குறிக்கும் சிறீலங்காப் படத்திஞல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (இப்படத்தையும் ஒப்சேவர் வெளியிட்டுள்ளது.) இந்நூலின் கடைசிப் பக்கத்தில் சிறீலங்காப் பொலிசாரால் தாக்கப்பட்டவர்களாகக் கூறப்படும் கனகரத்தினம் விஸ்வசோதி; ரத்தினம் அல்லது இன்பம் என்பவரதும் இன்ஞெருவரதும் நிழற்படம் உள்ளது. இந்நூல் ஐ.நாடுகள் சங்கம், அமெரிக்கா, இந்தியா பிரான்சு, ஜேர்மனி, நோர்வே எனும் நாடுகளில் ஈழத்தமிழ் இயக்கத் தலைவர் எனப்படும் திரு. வைகுந்தவாசன் செய்த பிரசாரங்களை எடுத்துரைக்கிறது. அன்றியும் இந்நூல் திரு. அமிர்தலிங்கம் 'தமிழ் ஈழ இனமும் ஐக்கியநாடுகள் சங்கமும்' எனும் நூலுக்கு எழுதிய முன்னுரையையும் கொண்டுளது.

## ● 'இனத்துரோகி' என அழைக்கப்படும் இராசதுரை முன்வரிசையில்....

தொடர்ந்து ஒலிபரப்பியுளது.

இலங்கை வானொலியின் இப் பொய்ச்செய்தி குறித்து வீரகேசரியில் வெளிவந்த பல் சுவை நிறைந்த சொல்லோவியத்தை எல்லோரும் அறிதற்காக அப்படியேயிங்கு தருகிறேம்.

''இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இரண்டுநாள் கழித்து அதுவும் உலகத்தமிழ் மாநாட்டில் நடக்காத ஒரு விடயத்தை நடந்ததாகச் சிருஷ்டித்து ஒலிபரப்பியதாகக் கூறப்பட்ட செய்தி ஒன்று மதுரைத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருந்தது.

சித்தம் தேடியதாகவும் அமைந்துவிடும்''

**சிங்கள அரசின் உள்நோக்கம்**

இப்பொய்ச் செய்தியைப் பரப்பித் தமிழ் நாட்டு முதலமைச்சருடன் இலங்கைத் தமிழ் மக்களை மோதச்செய்தற்கு இலங்கை வானொலி முயன்றது. எம். ஜி. ஆருக்கு எதிரான கொந்தளிப்பொன்று ஈழத்தமிழரிடையே தோன்றுதற்கும் வழிவகுத்தது; எனி

அரசியற் கட்சிகளில் த. வி. கூட்டணிக்கும் ஈழப்பிரசாரத்துக்கும் எதிர்ப்பாயிருந்த கட்சிகள், சார்பாயிருந்த கட்சிகள் முதலியன பற்றிய செய்திகளைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறர்.

இவருடைய தகவலின் படி இந்திய கொம்மியூனிசக்கட்சியே த. வி. கூட்டணியினர் பிரசாரஞ் செய்தற்கும், தமிழ் ஈழப் போராட்டக் காட்சியினை நடத்துதற்கும்உதவிசெய்தது.

தொடக்க விழாவிலே தமிழ் நாட்டு முதலமைச்சர் பேசாத பேச்சை- அவர் தொல்காப்பியர் அரங்கிலே குமாரதாசன் எனும் இளைஞருக்கும் அமைச்சர் இராசதுரைக்கும்கொடுத்த சூடான மறுமொழியைத் தொடக்க விழாவிலே திரு.அமிர்தலிங்கத்துக்குஅவர் கொடுத்த பதிலாகக் காட்டுதற்கும் முயன்று ஒப்சேவர் பெரும் பழிக்கு ஆளாகியுளது.

**விநோதக்காட்சி**

''கொம்மியூனிசக்கட்சியால் வாடகைக்குப் பெறப்பட்ட

## ● 'ஒற்றர் வேலையில் ஒருவர்' --- 'ஒப்சேவர்' செய்திகள்!

தமிழ்மாநாட்டுத் தொடக்க விழாவில் இலங்கை எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பேசிய பேச்சிடையே முதல்வர் எம். ஜி. ஆர் இடைமறித்துப் பேசி, இலங்கைத் தமிழர்பிரச்சனையில் எங்களால் தலையிட முடியாது என்று கூறிவிட்டார் என்று இலங்கை வானொலி தனது செய்தி ஒலிபரப்பில்அடிக்கடி தெரிவித்தது என்றசாரப்பட அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தி பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திச்சேவை பரிகாசத்திற்கும் இலக்கானது.

னும், உண்மையைத் தமிழ் நாடும், ஈழநாடும் அறிந்தபின் அமைதி பிறந்தது., இதன் பின் தமிழ்நாட்டினரதும் அந்நாட்டு அரசினரதும் ஈழநாட்டினரதும் தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களினதும், இணைப்பும் பிணைப்பும் மேலும் வலுவடைந்துள. சிங்கள அரசாங்கத்தின் உள்நோக்கத்தைத் தமிழ்நாட்டரசு இப்பொழுது நன்கு உணர்ந்துளது. இனி எந்தப் பிரசாரங்களாலும் கொண்டாட்டங்களாலும் அழைப்புக்களாலும் தமிழ்நாட்டரசைத் திசை திருப்ப முடியாது.

இக்கட்சி இலங்கை கொம்மியூனிசக் கட்சியின் தொடர்பான இந்தியக்கட்சி எனவும் திரு. கந்தையா விளக்கியிருக்கிறர்.

**'துரோகிக்கு முதல்வரிசை'**

திரு. அமிர்தலிங்கம் இந்தியன் ''எக்ஸ்பிரசுப்'' பத்திரிகைக்குக் கொடுத்த அறிக்கையிலே சிங்கள அரசாங்கத்துக்கு எதிரான பகுதிகளைச் சுட்டிக் காட்டியபின் ஒப்சேவர் திரு. அமிர்தலிங்கத்திலே கொண்டஆத்திரத்தைத் தீர்ப்பதற்காகத் தொடக்க விழா மேடையில் அவருக்கு இரண்

ஒரு சிறுமண்டபத்தில் விநோதமான காட்சி ஒன்று நடாத்தப்பட்டது'' எனக்கூறும் ஒப்சேவர் இக்காட்சியைப் பற்றிக் கூறியதைச் சிறிதுசுருக்கமாகத் தருகிறேம்.

''சிறீலங்காத் தமிழர்க்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொல்லைகள் என்பவற்றை விளக்கும் நிழற்படங்கள், கேலிச்சித்திரங்கள் ஆவணங்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ''1982ல் தமிழ் ஈழம்'' எனும் புத்தகம் காட்சியைப் பார்க்க வந்தவர்கள் ஒவ்வொருவருக்கும்

ஒப்சேவரைப் போல 1982- தமிழ் ஈழம் எனும் நூலுக்கு ஆய்வுமதிப்புரையினை எந்த ஒரு பத்திரிகையும் தரவில்லை. இவ்வாறு விளக்கமாக விரித்தெழுதிச் சிங்கள சிறீலங்காவிலும் அந்நூலையும் தமிழ்ஈழவிடுதலை இயக்கத்தையும் பற்றிய செய்திகளைத் தமிழ் ஈழப்படத்துடன் திறம்படப்பரப்பி உதவிய ஒப்சேவருக்குத் தமிழ் ஈழ மக்கள் நன்றி பாராட்டலாமன்றே?

(தொடரும்)

---

## த.வி.கூ. யாழ். மாவட்ட அமைப்பு வேலையும் கிராம யாத்திரையும்

11-2-81ல் கூடிய பணியாளரின் விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட கிராம யாத்திரைத் திகதி விபரங்களை இதன்கீழ் அறியத்தருகிறேம்.

22-2-81-ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஆரம்பம். காலை 8 மணிக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ.வின் வேலணை இல்லத்தில் சந்தித்தல். அங்கிருந்து காலை 9 மணிக்கு மண்டைதீவுக்குச் செல்லல்.

22-2-81 - நெடுந்தீவு.

23-2-81 - நயினதீவு, புங்குடுதீவு.

24-2-81 - அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர்.

25-2-81 - காலை 8 மணிக்கு சித்தன்கேணி த. வி. கூ. அலுவலகத்தில் சந்தித்தல். தொடர்ந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்புப் பகுதிகளும்.

26 - 2 - 81 - சண்டிலிப்பாய் உ. அ. அதிபர் பிரிவில் மானிப்பாய் கோவிற்பற்றும், பெரிய விளான், மாதகல் பகுதிகளும்.

27-2-81 - உடுவில் உ. அ. அதிபர் பிரிவு - மானிப்பாய்த் தொகுதியில்.

28-2-81 - காலை 8 மணிக்கு தெல்லிப்பளை த. வி. கூ. அலுவலகத்தில் சந்தித்தல். வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முழுவதும்.

7-3-81 - யாழ்ப்பாணத் தொகுதியில் ஆரம்பம். காலை 8 மணிக்கு திரு. நா. த. செல்லத்துரை அவர்களது இல்லத்தில்சந்தித்தல். யாழ்.தொகுதி முழுவதும்.

8-3-81 - காலை 8 மணிக்கு யாழ். முதல்வர் திரு.இ.விசுவநாதன் அவர்களது இல்லத்தில் சந்தித்தல்.நல்லூர்த்தொகுதி.

9-3-81 - நல்லூர்த்தொகுதி (நண்பகல் வரை). பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய்த்தொகுதி இருபாலையில் ஆரம்பித்தல்.

10-3-81-கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையின் 'மகாவளவில்' கோப்பாய் இல்லத்தில் சந்தித்தல் - கோப்பாய்த்தொகுதி.

11, 12-3-81 - உடுப்பிட்டி, பருத்தித்துறைத்தொகுதிகள்.

13-3-81 - சாவகச்சேரித் தொகுதி.

14-3-81 - சாவகச்சேரித் தொகுதி - நண்பகல் வரை. நண்பகலுக்குப்பின் கிளிநொச்சித்தொகுதியின் பளை உ. அ. அதிபர் பிரிவு.

15-3-81 - பருத்தித்துறைத் தொகுதியின் கிழக்குப்பகுதி.

---

### முஸ்லிம் வித்தியாலயங்களுக்கு மூடுவிழா!

மதவாச்சித் தொகுதியில் உள்ள இரண்டு முஸ்லிம் வித்தியாலயங்கள் மூடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் இன்மையினலே இந்த வித்தியாலயங்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

தமிழ் வட்டாரத்திலே அநேகமான வித்தியாலயங்கள் ஆசிரியர் பற்ருக்குறை காரணமாகப் பரிதாபநிலையில் இருப்பதாக அறியக் கிடக்கின்றது.

---

### பாகிஸ்தானும் சிறீலங்காவும் இணைந்து இந்தியாவுக்கு 'மணிகட்ட' முயற்சியா?

பாகிஸ்தான் இராணுவ உபதளபதி ஜெனரல் சவரர்கான், இம்மாத முற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இவரது வருகையின்போது தீவின் பல்வேறு பகுதிகளுக்கும் இவர் சென்று, இராணுவப் பொறுப்பு உத்தியோகத்தர்களையும், ஜனதிபதி உள்ளிட்ட அரசாங்கத் தலைவர்களையும் சந்தித்துள்ளார். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழீழ நகராகிய திருக்கோணமலையில் பல பகுதிகளுக்கும் இவர் விஜயஞ் செய்துள்ளார்.

பாகிஸ்தான், சிறிலங்கா எலிகள் இந்தியப் பூனைக்கு 'மணி கட்ட'த் திட்டமிடுகின்றனவா? அன்னை இந்திராவின் கருத்தில், சிறிலங்காவின் சமீபகால நடவடிக்கைகள் எச்சரிக்கையைத் தோற்றுவித்துள்ளதாக ஊர்ஜிதமற்றசெய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர்களும் அரசியலாளரும் இணைந்தே அன்னைத் தமிழை வளப்படுத்த வேண்டும்!

தமிழியல் ஆராய்ச்சி அறிஞர்களிலும் தமிழ்ப் பேரறிஞர்களிலும் பலர் தமிழியல் ஆராய்ச்சிக்குத் தனிமுதன்மை கொடுக்கப்படவில்லை எனவும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் பேராளர்கள் தக்கவாறு போற்றப்படவில்லை எனவும் கருதுகின்றனர். இந்தத் தொல்காப்பியர் அரங்கிலே கருத்துரை வழங்கியவர்கள் சிலர் இக்குறைகளை எடுத்துக் காட்டியுமுளர்.

அரசியற் செல்வாக்கும் ஆட்சியின் தலையீடும் ஆராய்ச்சி மாநாட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் வாய்ப்பைப் பெற்றன; தமிழ் நாட்டரசினாலே நடத்தப்படும் பெருமையைப் பெற்றன. தமிழ் நாட்டிலே தமிழ் நாட்டரசினாலே தமிழ்முழு தறிந்த தலைமகன் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராயிருந்த பொழுது இரண்டாவது மாநாடு நடைபெற்றது. அவர்வழிவந்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். முதலமைச்சராயிருக்கும் பொழுது இம் மாநாடு நடைபெறுகின்றது. எனவே ஏனைய மாநாடுகளிலும் வேறுபட்ட முறையில் மிக சிறப்பாக அறிஞர்களுக்கு மட்டுமன்றிப் தமிழ்ப் புலவர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் தனி மதிப்பு நாட்டிலே உண்டாயிற்று அரசியலாருக்குத் தலை குனிந்து அஞ்சி வாழும்நிலைமை மாறித் தலைநிமிர்ந்து வாழும் நிலைமை உண்டானது. எனவே தமிழ் மாநாடுகளிலே அரசியல் வாதிகளிலும் தமக்கே முதலிடமும் முன்னீடும் கிடைக்க வேண்டுமென்று அவர்கள் கூறுவதை எவரும் தடுக்க முடியாது. அறிஞர்களும் அரசியலாரும் சேர்ந்தே தமிழை வளர்க்கலாம், வளப்படுத்தலாம் என்பதை இரு

## உலகெலாம் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டின் உதவியை எதிர்பார்க்கிறார்கள்!

அளிப்பனவாகா எனவும் ஒரு சாரார் எண்ணுகின்றனர். இதனாலே கருத்து வேறுபாடுகள் தலை தூக்குவதை நாம் காணத்தக்கதாக இருக்கிறது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நான்கு நாடுகளில் நடந்துள்ளன. மலேசியாவில் நடைபெற்ற முதலாவது மாநாடு தகுதி நிறைந்த ஆய்வாளரைப் பேராளராகவும் ஏனைய சிலரைப் பார்வையாளராகவும் கொண்டு நடைபெற்றது. அம்மாநாட்டிலே எவ்வகையிலும் பொதுமக்கள் பங்கு கொள்ளவில்லை. மாநாடு முடிந்த பின்னர் பிற இடங்களிலே மாநாட்டுக்கு வருகை தந்த தமிழ் அறிஞர்கள் சொற்பொழிவாற்றுதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

மூன்றாவது மாநாடு பாரிசிலே நடைபெற்றது. ஆராய்ச்சி அறிஞர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். .ஆராய்ச்சியாளர் பலர் அதில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கிடைக்கவில்லை.

நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்திலே நடைபெற்றது. இலங்கையின் சிங்கள அரசாங்கம் அம் மாநாட்டுக்கு உதவி செய்யவில்லை, அது விரும்பிய படி கொழும்பில் நடத்த மறுத்தமையால் உபத்திரவம் செய்யத் தொடங்கியது. இதனால் தமிழ் மக்கள் திரண்டெழுந்து யாழ்ப்பாணத்தில் அதனை மக்கள் விழாவாக நடத்தினர். இந்த மாநாடும் ஆராய்ச்சி அறிஞர்கள் பார்வையாளர்களுடன் நடைபெற்றது தொடக்க விழாவும் நிறைவு விழாவும் மட்டுமே பொதுமக்களுக்குமுரியனவாயமைந்தன. கடைசி நாளன்று பொலிசாரின் தலையீட்டால் விழாக் குழம்பியதும் ஒன்பது தமிழ் மக்கள் உயிரிழந்ததும் இப்பொழுது வரலாற்றின் ஒரு பகுதியாகிவிட்டன.

இரண்டாவதுமாநாடும் இந்த ஐந்தாவது மாநாடுமே தமிழ் நாட்டிலே நடைபெறும் பொது மக்களுக்கும் பயன்படும் முறையில் கலைநிகழ்ச்சிகளுடனும் பலவகைக் காட்சிகளுடனும் இது நடைபெறுவதியல்பேயாகும். மக்கள்தலைவர்கள் நடத்தும் எந்த மாநாடும் மக்களுக்கும் பயன்படல் வேண்டும். அன்றியும் தமிழுணர்ச்சி குன்றித் தம் பெருமையிழந்து தம்மை அறியாமல் வாழப் பழக்கப்பட்ட மக்களுக்குத் தாய்த் தமிழில் பற்றையும் பாசத்தையும் வளர்ப்பதற்கு எழுச்சியையும் விழிப்பையும் உண்டாக்குதற்கும் இத்தகைய மாநாடுகள் இன்றியமையாதன.

இதனாலேயே இந்த இரண்டு மாநாடுகளிலும் தமிழ் ஆராய்ச்சி அரங்குகளுடன் பொதுமக்களுக்கு பயன்படும் இலக்கிய இசை--நடன--நாடக அரங்குகளும் காட்சிக் கூடங்களும் இடம் பெற்றன. இந்த அமைப்பு முறை எவ்வாற்றானும் தமிழ் ஆராய்ச்சி அரங்கு நிகழ்ச்சிகளையும் பாதிக்கவில்லை. அரசினர்

பாலரும் உணர்ந்து கொள்ளல் நன்று,

அண்ணாவின் ஆட்சி தமிழகத்தில் தோன்றிய பொழுது தமிழ் நாட்டிலுள்ளோர் மட்டுமன்றி ஏனைய நாடுக



ளில் வாழ்ந்த தமிழ் மக்களும் பெருமிதமும் பெரும் மகிழ்ச்சியும் அடைந்தனர். அண்ணா பெற்ற பேற்றினைத் தாம் பெற்ற பேறாகத் தமிழர் யாவரும் உணர்ந்தனர். இதனாலே தாய் நாடாம் தமிழ் நாட்டி

கற்பிக்க ஆசிரியர்களை அனுப்ப நாங்கள் முயன்றோம். அப்பொழுதுள்ள தமிழ் நாட்டரசு இந்தக் குறையைத் தீர்க்கவில்லை. தமிழறிஞர்களையும் கலைஞர்களையும் சேய் நாடுகளுக்கு அனுப்புதல் வேண்டும். தமிழ்த் திரைப்படங்சள் தமிழ் நூல்கள் முதலியனவற்றையும் சேய் நாட்டினர்பெற விரும்புகின்றனர். மொழித்துறை, கலைத்துறை, கலாசாரத்துறை, முதலிய பல துறைகளில் தமிழ் நாட்டரசு ஏனைய நாடுகளிலுள்ள தமிழர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்க முன்வரல் வேண்டும்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் பயனாகப் பேரறிஞர் அண்ணா அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவகத்தையும் மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆய்வுத் துறைகளையும் நிறுவினார். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் பயனாகப் புரட்சித் தலைவர் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஒன்றையும் உலகத் தமிழ்ச் சங்கத்தையும் நிறுவுவதாக உறுதியளித்துளர்.

''மூதூர்'' எனச் சிலப்பதிகாரமே போற்றும் மதுரைமாநகரிலே நிறுவப்படும் உலகத் தமிழ்ச் சங்கம் உலகத் தமிழர் யாவரையும் ஒன்றுபடுத்தி அவர்கள் யாவர்க்கும் கலங்கரைவிளக்கமாக என்றும் நின்று நிலவும் என்று எண்ணுகிறேன்.

தமிழ் மொழியின் எதிர் கால ஆக்கம் கருதி இரண்டொரு கருத்தினை எடுத்தியம்பி எனது உரையினை முடிக்கின்றேன்.

தமிழிலே பிறமொழி எழுத்

கலைத்துறை விஞ்ஞானத் துறை பொறியியல்துறை முதலிய எல்லாத்துறைப் பாடங்களையும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வேறு சில நாடுகளிலும் தமிழிலே கற்பிக்கிறார்கள். இதனால் இந்நாடுகளிலே பல வகையான கலைச் சொற்களைச் ஆக்கிக் கையாளுகிறார். இக்கலைச் சொற்களிலே சில சொற்கள் நாட்டுக்கு நாடு வேறுபட்டனவாயமைகின்றன.

இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலே நான் படித்த கலைச்சொற்கள் எனும் ஆராய்ச்சி உரையிலே இந்த வேறுபாட்டை விரிவாக எடுத்துக்காட்டி விளக்கினேன். இந்த வேறுபாட்டை நீக்குதற்கு இந் நாட்டறிஞர்களின் குழு ஒன்றினை அமைத்து எல்லா நாடுகளிலும் வழங்கப்படும் தமிழ்க் கலைச் சொற்களை ஆராய்ந்து எல்லோரும் ஏற்று வழங்கத் தக்க கலைச் சொற் பட்டியல்களை அமைக்க வேண்டுமென்றும் கேட்டேன். இந்தப் பெரு முயற்சியைத் தமிழ் நாட்டரசேமுன்னின்று நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். எனினும் இந்தத் துறையில் இன்றுவரை போதிய முயற்சி செய்யப்படவில்லை.

தமிழ் மொழியின் எதிர் கால ஆக்கத்துக்கு தமிழ்க் கலைச் சொற்கள் உலகெங்கும் எவ்வகை வேறுபாடுமின்றி ஒரேசொற்களாக வழங்கப்படுதல் மிகமிக இன்றியமையாதென்பதை மீண்டும் அறிஞர்கள் பலர் வற்புறுத்திவருகின்றனர். இலங்கையிலே டிறெக்ரர் எனும் சொல்லுக்குப் பணிப்பாளர் எனும் சொல் வழக்குக்கு வந்துவிட்டது. தமிழ் நாட்டில் இயக்குநர் என்று கூறுகிறார்கள். இயக்குநர் எனும் சொல்லை ஒப்பநேற்றார் எனும்

## தமிழாராய்ச்சி மாநாட்டு தொல்காப்பியர் அரங்கில் பண்டிதர் கா. பொ. இரத்தினம், பா. உ. சிறப்புரை!

பொறுப்பேற்று நடத்தும் பொழுது அரசு அலுவலரைக் கொண்டே ஒழுங்குகளைச் செய்விக்க வேண்டும். ஆதலால் அரச அலுவலருக்கு முன்னீடு கொடுக்கப்பட்டுள்ள தென்று குறை கூறலாகாது.

எனினும், தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும் பல்கலைக் கழகங்களும் நடத்தவும் பொது மக்கள் பங்கேற்கும் தமிழ் மாநாட்டை அரசாங்க அலுவலர்கள் நடத்தவும் ஒழுங்கு செய்திருக்கவேண்டும். பிரித்து நடத்தி இருந்தால் தமிழ் அறிஞர்களுக்குரிய முதன்மை முற்றாகக் கிடைத்திருக்கும். குறைகளுக்கு இடம் இருக்காது.

பேரறிஞர் அண்ணா தமிழக முதலமைச்சரான பின் லிருந்து சேய் நாட்டினர் பற் பல உதவிகளையும் உந்துதல்களையும் எதிர்பார்த்தனர். இதனைத் தாய் நாட்டினர் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். பால் நினைந்து ஊட்டும் தாயாக இருக்காவிடினும் சேய்நாட்டுத் தமிழர்க்கு வேண்டிய உதவிகளை அரசியல் துறை தவிர்ந்த ஏனைய துறைகளிலே செய்தற்குத் தமிழ் நாட்டரசு முன்வரல் வேண்டும்.

அரசியல்துறை தவிர்ந்த ஏனைய துறைகளிலே பிறநாட்டுத் தமிழர்க்குத் தமிழ்நாட்டரசு உதவுவதை இந்திய அரசினர்--சிறப்பாக இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தடுக்க மாட்டார்.

பல ஆண்டுகளுக்கு முன் மொறிசியசுத் தீவிலே தமிழ் துக்களைக் கலந்து எழுதும் அடிமைப் பழக்கம் இன்னும் முற்றாக நீக்கப்படவில்லை. ஒருவருடைய பெயரின் முதலெழுத்துக்கள் எஸ். ஆர் என்றால் அந்த எஸ் ஐயும் ஆரையும் ஆங்கில எழுத்தில் எழுதிவிட்டு பெயரை மட்டும் பலர் தமிழில் எழுதுகிறார்கள். இவ்வாறு இருமொழிகளின் எழுத்துக்களைக் கலந்து எழுதும் அடிமைப் பாங்கை வேற்று நாட்டு மொழியினரிடையே நாம் காணமுடியாது.

பெயர்ப் பலகைகள், திரைப் படங்கள் முதலியவற்றிலே ஆங்கிலச் சொற்களுக்கு ஈடான அருந் தமிழ்ச் சொற்களினை எழுதாமல் ஆங்கிலச் சொற்களைத் தமிழிலே எழுதுவதும் கண்டித்து ஒதுக்கப்பட வேண்டியதாகும்.

சொல்லுக்குரிய தமிழ் சொல்லாக ஈழநாட்டில் வழங்குகிறோம்.

எனவே இத்தகைய வேறுபாடுகள் பெருகாமல் எல்லா நாடுகளிலும் வழங்கப்படும் கலைச் சொற்கள் ஒரே சொற்களாக அமைதற்குத் தமிழ் நாட்டரச விரைவில் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த ஐந்தாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாட்டில் மீண்டும் வற்புறுத்தி உனது உரையை முடித்துக்கொள்கின்றேன். ✻

''உதயசூரியன்''
(இந்தியா தவிர்ந்த)
வெளிநாடுகளுக்கான சந்தா
25 அமெரிக்கன் டொலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கைத் தர மறுப்பவர்களுக்குப் பாராட்டா?

சிறிலங்காவின் சிங்கள அரசின் பிரதமஅமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் துணைமுன்னவருமான பிரேமதாசா ஏழு அமைச்சர்களுடனும் பல பிரதி அமைச்சர்கள், மாவட்டஅமைச்சர்கள் பாராளுமன்ற உறுபினர்களுடனும் உத்தியோகத்தர்களுடனும் யாழ்ப்பாணத்துக்குப் படைஎடுத்து "வந்தார்; பல பகுதிகளுக்குச் சென்றார்; பல இடங்களில் மாலை மரியாதைகளைப் பெற்றார்; சந்தைகள் நூல் நிலையங்கள் முதலியவற்றைத்திறந்து வைத்தார். வீடமைப்புத் திட்டங்களைப் பார்வையிட்டார்: வரவேற்புக் கூட்டங்களில் பல கருத்துக்களைச் சொன்னார்.

### வியாபாரிமார் தேடிய விளம்பரம்

அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருமுன்னரே கொழும்பிலுள்ள பெரிய வியாபாரிகள் பலர் தங்கள் படைகளுடனும் வாகனங்களுடனும் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்கள். பிரதம அமைச்சருக்குத் தங்கள் நன்றிக்கடனையும் செல்வாக்கையும்காட்டுதற்குப் பல்வகையான பணிகளில் ஈடுபட்டார்கள். வீதி அலங்காரங்கள், சிகரங்கள் நிறுவுதல், அலங்காரவளைவுகள் அமைத்தல், மாலைகள் பொன்னுடைகள் அணிவித்தல், விருந்து கொடுத்தல் முதலியன குறிப்பிடத்தக்க சில பணிகளாகும். **தங்கள் பணிகளினாலே தங்கள் எதிர்காலநலனையும் உறுதிப்படுத்தினார்கள் சிலர்.**

### உத்தியோகத்தர் எல்லோரும் உழைத்தனர்

எல்லாஅமைச்சுகளைச்சேர்ந்த உள்ளூர் வெளியூர் அரசாங்க காட்சி கொடுத்தனர் பொது மக்கள் தெருக் கூட்டத்தைப் பார்க்கும் வழிப்போக்கர்கள் போலக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் பார்த்தனர்.

**நானூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டிருக்கும் தமிழ் இனத்தில் தம்மை ஆள்பவர்களுக்குத் தம்மைச் சிறந்த அடிமைகளாகக் காட்டிக்கொள்பவர்கள் இன்றும் உளர் என்பதைச் சிலர் ஊரும் உலகமும் அறியச் செய்தனர்.**

### எதிர்ப்புக்களின் மத்தியில் பிரதமர்!

எனினும், கடைஅடைப்புக்களும் பாடசாலைப் பகிஷ்கரிப்புக்களும் நகரசபைகளின் அரசியலறிவும் ஆட்சியிலறிவும் இன்மையால் இலங்கையின் வருவாயில், அரசாங்க உத்தியோகங்களில், அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்களில் **சிங்கள மக்களுக்குரிய பங்கைப் போலத் தங்களுக்கும் பங்குண்டு என்பதை அறியாமல் மயக்கநிலையில் வாழ்கின்றனர், தங்கள் பங்கைத் தருமாறு அடித்தும் இடித்தும் கேட்கும் உரிமையும், மறுத்தால் போராடிப்பெறும் தகுதியும் தங்களுக்கு இருப்பதைச் சிறிதும் உணராமலும் சிலர் வாழ்கின்றனர்.**

இதனால் சிங்கள அரசாங்கங்களின் அமைச்சர்கள் இங்கு வந்துமாலை மரியாதை பெற்று **நான்கு மாவட்டங்களில் இன்று** வரை 74 மாதிரிக்கிராமங்கள் நிறுவப்பட்டுள. மாவட்டத்துக்குச் சராசரி மூன்று கிராமங்கள் அமைக்கப்பட்டுள, ஆனால் யாழ்மாவட்டத்தில் ஒருமாதிரிக் கிராமம் மட்டுமே அமைக்கப்பட்டுளது. சிங்களத் தொகுதிகள் சிலவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மாதிரிக் கிராமங்களும் அமைக்கபட்டுள. யாழ்மாவட்டத்தில் குறைந்தது மூன்று கிராமங்களுக்குப் பதிலாக இன்று வரை ஒரு மாதிரிக் கிராமமே அமைக்கப்பட்டுளது. அதுவும் 23 மாவட்டங்களில் 74 கிராமங்களை அமைத்தபின் 75 ஆவது கிராமமாக அமைக் மாவட்டங்கள் யாவற்றுக்கும் தானே பணம் கொடுக்கப்பட்டு அம்மாவட்டங்களிலே இவற்றிலும் பார்க்க பெரிய சந்தைகளும் நூல் நிலையங்களும் கட்டப்பட்டுள்ளனவே! **எங்களுக்குரிய பங்குப் பணத்தில் ஒரு பகுதியை மட்டும் தந்ததற்கு வரவேற்பளிக்க வேண்டுமா?**

மயிலிட்டி மீன் பிடித்துறைமுக வேலையும் காங்கேசன் துறைமுக வேலையும் எத்தனை வருடங்களாக இழுபட்டு வந்துள்ளன. **இந்தப்புறக்கணிப்பைக் கண்டிக்க வேண்டாமா? பாராட்ட வேண்டுமா?**

தொகுதிதோறும் கட்டப்படும் வீட்டுத்திட்டப் படிஎல்

## அடிமைத் தமிழர் சிலரின் அறியாமை!

புறக்கணிப்பும் ஐ. தே. கட்சியின்போலிவேடத்தையும்நீலிக் கண்ணீரையும் ஒற்றுமைப் பல்லவியையும், தமிழ் மக்கள் நன்கறிவர் என்பதைச் சிங்கள ஆட்சிக்கு நன்குபுலப்படுத்தின. யாழ். மாநகரசபையின் வரவேற்பைப் பிரதமருக்குப் பெற்றுக் கொடுத்தற்குத் திரைமறைவில் அச்சுறுத்தியும் ஆசைகாட்டியும் செய்தமுயற்சிகள் த. வி. கூட்டணியின் உறுதியான தீர்மானத்தினாலே முறியடிக்கப்பட்டன.

இச் சூழ்நிலையினாலே தாக்கப்பட்டதனாலே பிரதமர், யாழ்ப்பாண மக்கள் தலைவர்களிலும் அறிவுமிக்கவர்கள் என்று போலிப்புகழ்மாலை சூட்டினார். **இந்த அறிவுமிக்க தமிழ் மக்களே தங்கள் தலைவர்களைத் தெரிவுசெய்தவர்கள்** "அதனைத்தந்தோம்; இதனைத் தந்தோம்" எங்களோடு ஒத்துழைத்தால் இனியும் தருவோம்" என்று கூறியவுடன் இலகுவில் ஏமாற்றப்படுகின்றனர்.

### ஐ. தே. கட்சி அரசும் புறக்கணிக்கிறது.

இந்நாட்டுத் தமிழ்மக்களுக்குரிய பங்கை எந்தத்துறையிலும் சிங்கள அரசாங்கங்கள் கொடுப்பதில்லை. அவர்களிடம் இரந்து சிறுபங்கைப் பெற்று மானமிழந்து உரிமையற்று நாம் வாழ முடியாது எனவே, நாம் மானத்துடன் வளமாக வாழ வேண்டுமானால் நம்மைநாமே ஆளல்வேண்டும் என்கிறோம். இதற்காகவே தமிழ் ஈழ ஆட்சியை நிலைநாட்ட முயல்கிறோம். **இதனை ஒவ்வொரு தமிழனும் எந்நிலையிலும் எக்காலத்திலும் மறக்கக்கூடாது.** பிரதமரின் ஐ. தே. கட்சி அரசாங்கமும் எங்களுக்குரிய பங்கைத் தரவில்லை. தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணித்துளது; த. வி. கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கொடுக்கும் கேள்விக்கணைகளுக்கும் நிகழ்த்தும் கண்டன உரைகளுக்கும் ஈடு கொடுக்க முடியாமலே தமிழ் மக்களுக்குச் சிலவற்றைத் தருகிறது: பலதுறைகளிலே புறக்கணிக்கிறது. இதனைப் புள்ளி விபரங்களுடன் சுட்டிக் காட்டுகிறோம். **இவற்றை மறுக்க முடியுமானால் மறுக்குமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுகிறோம்;**

### 75 ஆவது மாதிரிக் கிராமம் தானே!

முதலிலே பிரதமர் இங்கு வந்து செய்த பணிகளைப் பற்றி ஆராய்வோம். உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கன்பொல்லையில் மாதிரிக் கிராமத்தை அவர் திறந்து வைத்தார். **இது இந்த அரசாங்கம் நிறுவிய 75 ஆவது மாதிரிக்கிராமம். இருபத்து**

கப்பட்டுள்ளது. இந்த மாதிரிக் கிராமத்திலும் பார்க்கத் தொகையான வீடுகளையும் பல்வகை வசதிகளையும் கொண்ட மாதிரிக் கிராமங்கள் சிங்கள மாவட்டங்களிலுள. **எனவே யாழ்மாவட்டத்தில் ஒருசிறிய மாதிரிக் கிராமத்தைக் காலந்தாழ்த்தி அமைத்ததற்குப் பாராட்டுத் தேவையா?**

### யாழ்ப்பாணத்துக்கு விசேடமாக கிடைத்தது என்ன?

சந்தைகள் நூல் நிலையங்கள் சிலவற்றை கட்ட அரசாங்கம் பணம் கொடுத்துளது. இவ்வாறு பணம் கொடுத்தது, யாழ்மாவட்டத்துக்கு மட்டுந்தானா? சிங்கள லா மாவட்டங்களிலும் போல யாழ்மாவட்டத்திலும்வீடுகள் கட்டப்படுகின்றன. எனவே, இது யாழ்மாவட்டத்துக்கு மட்டும் செய்யும் பணியாகுமா?

சுய உதவி வீடமைப்புத்திட்டங்களும் பிற வீடமைப்புத்திட்டங்களும்இலங்கை முழுவதிலும் செயற் படுத்தப்படுகின்றன. யாழ்மாவட்டத்திலும் பார்க்கப் பிற மாவட்டங்கள் பலவற்றிலே கூடியதொகையான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. **இதற்கு யாழ்மாவட்டம் பாராட்டுப் பகரவேண்டுமா?**

(தொடரும்)



தமிழாராய்ச்சி மாநாட்டிற்குத் தமிழகம் சென்ற தலைவர் அமிர் தம்பதியினருக்கும் ஏனையோருக்கும்இராமேஸ்வரம் விசைப்படகு ஊழியர் சங்கம்அளித்த வரவேற்பின்போது எடுத்த படம்.

## ஐ. தே. க. அரசாங்கத்தின் புறக்கணிப்புப் புள்ளி விபரங்கள்!

உத்தியோகத்தர்கள் யாவரும் பிரதமரின் அரச பவனியைச் சிறப்பித்தற்குத் தங்களின் உதவி உத்தியோகத்தர்கள் சிற்றூழியர்கள் முதலான பலருடைய உதவியுடன் இரவு பகலாக உழைத்தார்கள். தங்களோடு தொடர்புடைய **பொது நிலையங்களையும் வீதி அலங்காரங்களுக்கும் வரவேற்புக்களும் ஆள்சேர்ப்பதற்கும் பயன் படுத்தினார்கள். விவசாய நிலையங்களுக்குக் கொடுக்கப்பட்ட புதிய இழுபொறிகள் (ராக்றர்ஸ்) யாவும் ஊர்வலங்களிலே** அலங்கார ஊர்திகளாக்காட்சியளித்தன.

வணிகர்களின் பணத்தாலும் அரசாங்கப்பணத்தாலும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் போன்ற கூட்டுறவுச்சங்கங்களின் பணத்தாலும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் சில பகுதிகள் விழாக்கோலம் கொண்டன. **ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் ஆதரவாளர் என்ற போர்வையில் தம்மை வளர்க்கும் உதிரிகளும் முன்னின்று என்பதும் எட்டுருத்தல் உணவுப் பண்டத்துக்கு அவர்கள் தம்மை விற்கவில்லை என்பதும் அவருக்குத் தெரியாதனவா?**

தமிழ்ப்பத்திரிகைகள் (ஆங்கில சிங்களப்பத்திரிகைகள் சேர்ந்துழைக்கவில்லை) பிரதமரின் அரசபவனியை ஈடிணையின்றி வர்ணித்தலிலும், அவரையும், அவர் ஈடுபட்ட செயல்களையும் வானளாவப் பாராட்டுதலிலும் போட்டியிட்டன.

பத்திரிகைகளின் பாராட்டுக்களாலும் நல் அடிமைகள் சிலரின் புகழுரைகளாலும் பிரதமர் பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் சிறப்பாக யாழ் மாவட்டத்துக்கும் கருணை கூர்ந்து அளவுக்கு மிஞ்சி வாரி வழங்கிவிட்டதாகக் கருதி மக்கள் சிலர் மயங்கும் நிலைமை அரும்பியுளது.

### எங்கள் பங்கு முழுவதும் எங்கே?

அடிமைப்பட்டிருக்கும்தமிழ் மக்கள் சிலருக்குப் போதிய

## 'உதயசூரியன்' விற்பனையாளர் தேவை!

புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, காலி, வதுளை, நாவலப்பிட்டி, மஸ்கெலியா போன்ற இடங்களில் உதயசூரியன் (த. வி. கூட்டணி வார இதழ்) விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விற்பனை முகாமையாளர்
"உதயசூரியன்"
238, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைப்பவன் காலினை.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மைக்காவது தைரியம் வருமா? பிரதமர் புத்தர் கோவிலில் நடந்த பூசையில் கலந்து கொண்டார். பிக்குவிடம், "என்னதேவை" என்று கேட்டார். "விகாரைக்கு மின்சார வசதியும், விகாரைக்கு முன்பாக அமைக்கப்பட்டுவரும் இறங்குதுறைறையை சீராகப் பூர்த்தி செய்ய நிதியும் தேவை" என்றுர் பிக்கு, உடனடியாக அவ்விடத்திலேயே அதிகாரிகளை அழைத்து ஆவன செய்யக் கட்டளைபிறப்பித்தார் பிரதமர், பின்னர் பிரதமரும் பரிவாரமும் பஸ் வண்டியிலேயே அம்மன் கோவிலை அடைந்தனர். கோவில் வாசலில் அடிமை ஒன்று, பிரதமரின் செருப்பை தன்கையால் கழற்றிவிட முற்பட்டதாம். நல்ல வேளையாக பிரதமர் அதை அனுமதிக்காது தாமேகழற்றி விட்டார். வழமைக்கு மாருன நேரத்தில் நாகபூசணிஅம்மாள் கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூசையை ஏற்றுக்கொண்டு, புறப்பட்டார் பிரதமர், கோவில் குருக்களையோ தர்மகர்த்தாக்களையோ "என்ன உங்களுடைய தேவை" என்று கேட்கவில்லை. நேரே சென்று பஸ்ஸில் ஏறியவுடன் பஸ் புறப்பட்டுச் சென்று "ஹெலிகோப்டரின் அருகே நிறுத்தப்பட, "ஹெலிகோப்டரில்" ஏறினுர் மீண்டும் மணல் மழை அபிஷேகம்! 'ஹெலிகோப்டர்' கண்ணுக்கெட்டாத தொலையில் மறைந்தது!

இதன்பின்னர் இடம் பெற்ற சில விடயங்களையும் சொல்லாவிட்டால் இக்கட்டுரை பூரணமானதாகாது:-

முதலாவதாக, பிரதமர் பறந்து சென்ற சில நிமிடங்களில், உணவுப்பண்டங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்த மகாவித்தியாலயமண்டபம் குருக்ஷேத்திரமாக மாறியது கடமைக்கு வந்திருந்த பொலிஸ்காரரில் சிலரும் ஆளும் கட்சி அடிவருடிகளும் பாடசாலை ஆசிரியர்களும், இறைச்சிச் சட்டியைக் கைப்பற்றுவதிலும், மோதகம். வடை, வாழைப்பழங்களை முறியடிப்பதிலும் மூர்க்கமாக ஈடுபட்டனராம். இந்த யுத்தம் பலமணி நேரம் நீடித்ததாக அவதானிகள் அறிவிக்கின்றனர்.

இரண்டாவதாக பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் தொலைக்காட்சியில் 8-2-81 இரவு காண்பிக்கப்பட்டது. புத்தர் கோவிலில் பிரதமர் வரவேற்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி மட்டுமே (நயினுதீவுசம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுள்) தொலைகாட்சியில் ஒளிபரப்பப்பட்டது' அடிமைகள் மாலை சூட்டியதோ அம்பாள் காத்திருந்ததோ எள்ளளவும் காண்பிக்கப்படவில்லை.

மூன்ருவதாக பிரதமர் வந்து சென்ற ஒரு வாரத்துள் புத்தர் கோவிலுக்கு மின்வசதி வழங்கப்பட்டுவிட்டது. (நயினுதீவில் முன்னர் கிராமவிசேட ஆணையாளராகக் கடமையாற்றிய காலத்தில் திரு. மு. தம்பிமுத்து அவர்கள் கிராம சபையின் பொறுப்பில் முக்கிய சந்திகளில் மின்விளக்குகள் அமைக்க நிதி கோரியிருந்தார். இன்றளவும் இதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை.)

துரோகிகளே! இப்போதாவது புரிகிறதா உங்களுக்கு? பச்சை மண்ணும், சுட்ட மண்ணும் ஒட்டாதுஎன்பதும் சிங்களவன் சிங்களவன் தான், தமிழன் தான் என்பது? உதைப்பவனின் காலை முத்தமிடும் நிலை இனியாவது ஒழியுமா?


தென்னகத்தில் மிகுந்த பரபரப்பையூட்டி
வெற்றிவிழாக் கொண்டாடிய
"வெள்ளி விழா" வண்ணச் சித்திரம்

சாந்தி -(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 2-15, 6-00,
இரவு 9-30

சரத்பாபு, சுமலதா, சுந்தரராஜன்,
எம். என். ராஜம்
ஆகியோர் நடித்த
பி. எஸ். வீரப்பா அளிக்கும்....

திசை மாறிய பறவைகள்

(முற்றிலும் மாறுபட்ட, திசை திருப்பமான கதை)



(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30

விஜய குமாரதுங்க,
மாலினி பொன்சேகா
நடிக்கும்
மெவுஞ பிலிம்ஸ்

பனி மலர்கள்

இசைமழை பொழியும் ஒரு ஜிப்ஸிப் பெண்ணின்
உணர்ச்சிக் காவியம்;
தயாரிப்பு:- சரத் தஸநாயக்கா டைரக்ஷன்;-தயா விமலவீர


# கிராமயாத்திரையில் இயக்கப் பணிகள்

2-2-81 ல் பொத்துவில் தொகுதியில் தலைவர் அமிர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கிராமயாத்ரையின் போது பொத்துவிலில் கிளை அமைப்பும் கருத்தரங்கும் திரு. ரி. மகேந்திரன் இல்லத்தில் நடைபெற்றது.

இதற்கு முன் பொத்துவில் கத்தோலிக்க மெதடிஸ்ற் ஆலயங்களில் பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் நடைபெற்றன. இதில் தலைவர்களும் தொண்டர்களும் ஏராளமாகக் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து பின்வரும் இடங்களில் கிளை அமைப்புபணிகளும் கருத்தரங்குகளும் இடம் பெற்றன:

**காலம்:- 3-2-81**

கோமாரி, சங்கமான்கண்டி, விநாயகபுரம், தம்பிலுவில், திருக்கோவில் தம்பிலுவில் 1ம் குறிச்சி, தம்பட்டை,

**காலம்: 4-2-81**

பனங்காடு, அக்கரைப்பற்று 40 கட்டை, கண்ணகிகிராமம் அக்கரைப்பற்று 7 ம் குறிச்சி, 9 ம் குறிச்சி

**காலம்: 5-2-81**

அக்கரைப்பற்று முஸ்லீம் இளைஞர்கள் தேநீர் விருந்து, திராய்க்கேணி -- மீனோடைக் கட்டு, அட்டப்பள்ளம், காரைதீவு, காரைதீவுகரடித் தோட்டம், காரைதீவு 3 ம் குறிச்சி, காரைதீவு 1 ம்குறிச்சி காரைதீவு 2 ம் குறிச்சி, காரைதீவு, வீரமுனை

**காலம்: 6-2-81**

வளத்தாப்பிட்டி, கணபதிபுரம், மல்வத்தை, வீரச்சோலை, சொறிக்கல்முனை

**காலம்: 7-2-81**

சவளக்கடை, அன்னமலை-நாவிதன்வெளி15ம்குடிறேற்றம் 15 ம் கிராமம்கல்முனை, 11 ம் குடியேற்றம், மத்தியமுகாம், 4-ம் குடியேற்றம்

**காலம்: 8-2-81**

சேனைக் குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை நகர், கல்முனை 3-ம் குறிச்சி, இஸ்லாமிய இளைஞர் கருத்தரங்கு கல்முனை 1-ம் குறிச்சி, பெரியநீலாவணை பாண்டிருப்பு

**காலம்: 9-2-81**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கற்குடாத்தொகுதியில்வந்தாறுமூலையில்அமரர் மாணிக்கவாசகர்நினைவு தினக் கூட்டம் (பி. ப. 3 மணிமுதல் இரவு 11-00 மணி வரை)

பல்லாயிரக்கணக்கானமக்கள் கலந்து கொண்ட நினைவு தினக் கூட்டத்தில் தலைவர்கள் கலந்து கெண்டு உணர்ச்சி மிகு உரையாற்றினர்.

## ஈராண்டு நிறைவு விழா!

அறவழிப் போராட்டக்குழு தனது ஈராண்டு நிறைவு விழாவை இம்மாதம் 28-2-81 ல் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் நடாத்தவிருக்கின்றது.

விழாவின் போது சிறுவர்களுக்கு உணவு வழங்கல், அறவழிப் புத்தகக்காட்சி, பயிற்சி பெற்றேர் கூட்டம் முதலானவை இடம் பெறும்.

## இந்தியத் தீர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாகவே கருதப்படுகின்றது. எனவே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான மோதல் கொள்கை சம்பந்தப்பட்டதென்றும் அது அரசியல் சூழ்நிலையை இன்னும் விரிவடையுமென்றும் அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகின்றது.

உதயசூரியன் வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டுயாழ்.புனிதவளன் கத்தோலிக்கஅச்சகத்தில் 20-2-81ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

## ஊழல் ஆட்சிக்கெதிராக மாணவர்கள் சீற்றம்!

மாவட்டஅடிப்படையிலான பல்கலைக்கழகத் தெரிவு முறையில் ஊழல் நடந்திருப்பதாக குற்றம் சாட்டி மன்னுர் மாவட்ட உயர்தர மாணவ ஒன்றியம் குமுறி எழுந்திருக்கின்றது.

இதனுல் மேற்படி ஒன்றியத்தால் 13-2-81ல் நடாத்தப்பட்ட பிரமாண்டமான மௌன ஊர்வலத்திற்கு ஆரம்பத்தில் அனுமதி வழங்கிய பொலிஸார் பின், மாணவர்களின் கையிலிருந்த சுலோகங்களைக் கிழித்தெறிந்து ஊர்வலத்தையும் தடை செய்ய முற்பட்டுள்ளனர். எனினும் மாணவர்களின் ஒன்றுபட்ட பிடிவாதத்தின் காரணமாக ஊர்வலத்திற்கு அனுமதியளித்த பொலிஸார் சுலோகங்களுக்கு தடை விதித்து விட்டனர்.


எங்களிடம்
எல்லாவிதமான கிருமிநாசினிகள்
போறை ● சீமெந்து ● புடவைகள்
உப உணவுப் பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
அன்பர்கள் . ஆதரவாளர்கள் - கூட்டுறவாளர்கள்
இன்றே விஜயஞ்செய்து உங்கள் தேவையைப்
பூர்த்தி செய்யுங்கள்.
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
பதிவு இல. 1650 (மட்டுப்படுத்தப்பட்டது)



எங்களிடம்
அறுசுவை உணவு
பசும்பால், சுவையூட்டும் பானங்கள்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
லக்சுமி பவான்
சுருவில் வீதி, : : ஊர்காவற்றுறை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org